**வெள்ளவாய பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெள்ளவாய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு உரித்தான 69 காணித் துண்டுகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்து மதிப்பீடு செய்யப்படுமென அறிய தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா. 12,582,422 ஆக இருந்த போதிலும், அதனை ரூபா. 12,649,633 ஆக ரூபா. 67,211 மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்து மதிப்பீடு செய்யப்படுமென அறிய தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 253,886,540 பெறுமதியான 03 சொத்து விடயங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை, நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, வருமானப் பதிவேடு மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் மதீப்பீட்டாளர் களை ஆட்சேர்ப்பு செய்ய இருப்பதால் |

| | | | |
|---|---|---|---|
| | | | அதற்கமைய வேலை செய்வதோடு வருமானப் பதிவேட்டை கண்டுபிடிக்க முடியவில்லை என அறிய தருகின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 19 (xii) ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு உரித்தான 58 கடைக் காமரைகள் 30 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டிருந்தும் அதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விடயப்பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | இக் கடைகள் உள்ளுராட்சி மன்றங்கள் திணைக்களத்தினால் கட்டப்பட்டிருப்பதால் குத்தகைக்கு விடுவதற்கான ஆரம்பி நடவடிக்கைகளும் அந்த நிறுவனம் செய்துள்ளது என அறிய தருகின்றேன் |
| (ii) | 140 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடுவதற்காக ஆதனங்கள் காலரீதியில் மதிப்பீடு செய்யப்படாமல் 2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன நிதிப்பிரமாணம் | | | |
| | 571 | ரூபா. 2,234,942 கூட்டுத்தொகையான இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட 72 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்பாளர்களுக்கு பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதோடு பாதுகாப்பு பிணை வைப்பினை மீண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | . | | செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 1 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து கணக்குகளில் காட்டப்பட்டிருக்கும் சபையில் சேவையாற்றிய 55 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்தம் ரூபா. 132,098 ஆன ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடன் மீதிகளுடன் தொடர்பான நிறைய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்று / மரணித்து இருப்பதுடன் அதன் பிரகாரம் கடன்பட்டவர்கள் அல்லது பிணையாளிகள் தொடர்பாக எவ்வித தகவலையும் கண்டு பிடிக்க முடியாதிருந்தால் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு அனுமதியை பெற்றுக் கொள்ள விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. |
| (இ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 41 நிர்மாணங்களுக்குரிய பரீட்சித்து இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படவில்லை | வர்த்தமானியின் பிரகாரம் நிர்மாணங்களைப் பரீட்சித்து இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டும். | சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆட்களுக்கு எழுத்து மூலம் அறவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,196,471 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,066,419 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,046,500 | 6,046,520 | 2,344,739 | 3,701,781 | 6,055,383 | 6,046,520 | 2,234,195 | 3,812,326 |
| (ii) | வாடகை | 19,577,253 | 10,289,853 | 6,824,672 | 3,465,181 | 15,600,000 | 10,443,422 | 7,066,285 | 3,377,137 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 12,020 | 1,510,828 | 1,468,828 | 42,000 | 1,150,000 | 1,011,150 | 1,010,150 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,279,250 | 1,413,119 | 1,413,119 | - | 1,759,150 | 1,665,345 | 1,665,345 | - |
| | மொத்தம் | 27,915,023 | 19,260,320 | 12,051,358 | 7,208,962 | 24,564,533 | 19,166,437 | 11,975,975 | 7,189,463 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீத வரியை அறவிடுவதற்குரிய பிரதேசங்கள் 1986 ஆம் ஆண்டில் இனங்கண்டிருந்ததுடன் காலத்திற்கு காலம் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்குரிய பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | காலத்திற்கு காலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங் காணப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றமடைந்த பிரதேசங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 6,046,032 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,791,132 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட பெறுமதியில் அதாவது 63 சதவீதம் ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 10,473,959 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 7,824,260 அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஆரம்பத்தில் காணப்பட்ட தொகையில் 75 சதவீதமாகும். வீதவரி அறவீடு மிகவும் பலவீனமாக இருந்ததுடன் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட தொகையான 287 அலகுகளிலிருந்து ரூபா 7,453,867 | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | வருமானப் பரிசோகரின் சேவைகள் போதியளவில் கிடைக்காமை, ஆதனவரி, மதிப்பீட்டிற்காக வரியிறுப்பாளர்களினதும் வியாபாரச் சங்கத்தினதும் எதிர்ப்பின் காரணமாகவும் நிலுவை ஆதனவரி அறவிடுவது குறைவடைந்திருந்தது. நிலுவைகளை அறவிடுவதற்கு விசேட குழுவொன்ற ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து உறுப்பினர்களும் பதிய மதிப்பீட்டிற்கு எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். நிலுவை அறவிடுவதற்கு அறிவித்தல் வழங்கும் போது அரசியல் அதிகாரத்தின் ஆலோசணையின் பேரில் தற்காலிகமாக அதனை |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | | நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்த போதும் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியதருகின்றேன். |

**2.2.4 ஆதன வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 13 ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அறவிட வேண்டிய மீதி ரூபா 4,742,640 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை தொகையில் ரூபா 350,458 அறவிடப்பட்டுள்ளது. வருமான பரிசோதகர்கள் போதியளவில் இல்லாமையால் நிலுவை பணத்தை அறவிடுவதில் பலவீனம் காணப்பட்டதுடன் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.2.5 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 96 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 4,942,405 ஆன வாடகை அறவிடப் பட்டிருக்கவில்லை. உடைத்து அகற்றப்பட்ட 16 கடைகளிலிருந்து உடைத்து அகற்றுவதற்கு முன் அறவிடப்பட வேண்டிய ரூபா 22,175 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | மார்ச் மாதம் வரை ரூபா 298,435 அறவிடப்பட்டுள்ளது. கடை வாடகை மதிப்பீடு தெடர்பாக கடை உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் நிலுவையை அறவிடல் குறைவடைந்திருந்த துடன் எதிர் காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிய தரகின்றேன்.. |

**2.2.6 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 06 நிறுவனங்களுக்குரிய 16 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 84,000 தொகையான குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் நிலுவையில் ரூபா 24,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிய தருகின்றேன். |

**2.2.7 நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 38 பதாதைகளுக்காக முன்னைய ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 530,887 ஆன விளம்பர பதாதைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை பணம் அறவிடப்பட வேண்டும். | 17 விளம்பர பதாதைகளின் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.8 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான இயந்திரங்களை 2013 முதல் 2019 வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 634,320 அறவிட வேண்டியுள்ளது. | நிலுவை இயந்திர வாடகை அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தரப்பினருக்க அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**2.2.9 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,719,260 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 12,649,633 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவடுவதற்குத் தேவையான பட்டோலைகள் தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 38 செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இருக்கும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்பார்த்த நிதிஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளாமையால் நிறைவேற்ற முடியவில்லை. |

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் கழிவுப் பொருட்கள் அகற்றிப் இடப்படுகின்ற ஆனபல்லம காணியை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உக்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணியைக் கைப்பற்றி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுப் பொருள் தளத்தை நிர்மாணித்த பின் காணியைக் கையேற்க சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறி காட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிய தருகின்றேன் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 கடைகளினது குத்தகை உரிமையை கைப்பற்றுவதற்காக கோரிய கோப்பு வழக்கறிஞர்களிடம் ஒப்படைத்து 06 மாதம் தொடக்கம் 04 | குத்தகை உரித்தை கைப்பற்றுவதற்கா ன | கோப்புக்களை மீளப் பெற்று மற்றுமொரு வழக்கறிஞர் ஊடாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிய |

| | | | |
|---|---|---|---|
| | வருடம் வரையான காலம் கடந்திருந்தும் அக் கோப்புக்களை மீளப் பெற்று குத்தகை உரித்தை கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தருகின்றேன். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் 07 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை தாபிப்பதற்கான இடங்களை இனங்கண்டிருந்தும் அதற்கான உபவிதிகள் அமைக்கப்பட்டு கட்டணங்களை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டணங்களை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உபவிதியொன்றை தயாரித்து வர்த்தமாயில் வெளியிடுவதற்கு இருந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தினால் ஒரு பொது உறுப்பரை தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின் அதை பின்பற்றுமாறு அறிவுரை வழங்கப்பட்டதென அறிய தருகின்றேன். |
| (இ) | பிரதேச சபைக்கு உரித்தான வெல்லவாய நகரத்தில் அமைந்திருக்கும் நவீன சந்தைத் தொகுதியின் 10 கடைகள் மற்றும் பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடியில் அமைந்திரக்கும் 03 கடைகளை குத்தகைக்கு விட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளை குத்தகைக்கு விட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கேள்விதாரர்கள் முன்வராததால் இதை பற்றி மாதாந்தம் சபை ஒன்றுகூடலில் முன்வைத்து தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளது. |
| (ஈ) | பிரதேச சபைக்கு உரித்தான 17 கடைகளை குத்தகைக்கு விடுவதில் குத்தகைக்காரர்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிக்கவில்லை. | குத்தகையாளர் களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் இதைப் பற்றி கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியும் இதுவரை உடன்படிக்கை செய்யப்படாமையால் பொது சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானியில் கழிவுப் பொருள் அகற்றும் உபவிதிகளைப் பின்பற்றி கழிவுகளை அகற்றுவதற்காக வரி அறவிடுவதற்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுகளை அகற்றும் இடத்தில் நிலவும் பிரச்சினையின் காரணமாக கழிவுகளை பிரித்து எடுக்க முடியாதிருப்பதால் கழிவுப் பொருள் வரி அறவிடப்படுவதில்லை என அறிய தருகின்றேன் |
| (ஊ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 11 செயற்பாடுகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாததால் ஒரு அனுமதிப் பத்திரத்திற்கு ரூபா. 4000 வீதம் ரூபா. 44,000 இற்கான வருமானமொன்று சபையினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும், காலாவதியாகிய 75 அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் | இவ் வியாபாரங்களை பரிசோதித்து அதற்கான கட்டணத்தை அறவிட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக தொழில் உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதோடு காலாவதியாகிய அனுமதிப் பத்திரங்களுக்குரிய கைத்தொழில்கள் பற்றி உறுதி செய்து கொள்வதற்காக வெளிக்களப் பரிசோதனையை மேற்கொள்ள முடியவில்லை என அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு அனுமதிப்பத்திரத்திற்கு ரூபா. 4000 வீதம் ரூபா. 300,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டில் முழு சபை அதிகாரப்பிரதேசமும் உள்ளடங்கும் விதமாக சட்டவிரோதமான நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டவிரோதமான நிர்மாணப் பணிகளை இனங்காண்பதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | வெல்லவாய நகரத்தில் சட்டவிரோதமான நிர்மாணப் பணிகள் அகற்றபட்டுள்ளதை பற்றியும், 2020 ஆம் ஆண்டில் சபை அதிகாரப் பிரதேசம் உள்ளடங்கும் விதமாக ஆய்வொன்று செய்யப்படும் என அறிய தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட 09 பதவிகளுக்குரிய 10 வெற்றிடங்கள் நிறப்பப்பட்டிருக்கவில்லை. | பதவியணியில் வெற்றிடங்கள் நிறப்பப்பட வெண்டும். | உள்ளுராட்சித் மன்றத் திணைக்களத்திற்கு விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 04 நூலகங்களினால் 2001 ஆம் ஆண்டிலிருந்து வாசகர்களுக்காக விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா. 62,471 செலவிலான 412 நூலகப் புத்தகங்களை மீளப்பெற்று அல்லது அதற்கு பதிலாக பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நூலகப் புத்தகங்களை மீளப்பெறுவதற்கு அல்லது பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீதி புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்கு அல்லது பணம் அறவிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதத்தின் மூலம் கடைசி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதோடு விலாசங்கள் மாற்றமடைதல் போன்ற காரணங்களால் கடிதங்கள் திரும்பி வந்திருந்தன. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக கணிப்பபீடொன்று மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான வெவ்வேறு அளவிலான 57 காணித் துண்டுகளை அளவிடும் நடவடிக்கையை நடாத்தி சட்ட ரீதியான உரிமை கைப்பற்றப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை அளவிடும் நடவடிக்கையை மேற்கொண்டு சட்ட ரீதியான உரித்து | பல சந்தர்ப்பங்களில் காணிகளை ஐகயேற்று தருமாறு பிரதேச செயலாலரிடம் கோரிக்கை விடுத்தும் அதற்கு எவ்வித பதிலும் |

| | | | |
|---|---|---|---|
| | | கையேற்கப்பட வேண்டும். | கிடைக்கவில்லை. |
| (ஈ) | பொருட் பதிவேடுகளில் உள்ளடங்கும் 28 தண்டுகளுக்கு சொந்தமான கிழிக்கப்பட்ட தேக்கு மரப் பலகைகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்காது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | கிழிக்கப்பட்ட தேக்கு மரப் பலகைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | பாலர் பாடசாலைகளுக்கு மேசை நாற்காலிகள் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். |
| (உ) | இறுதியாக 2014 ஆம் ஆண்டில் நாளதுவகையாக்கப்பட்ட வீதிகள் பதிவேட்டின் பிரகாரம் 235 வீதிகள் நிலவியதோடு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் அவ் வீதிகளை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகள் பதிவேடு நாளது வகையாக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான வழிகளை மேலும் இனங்கண்டு வர்த்தமானியில் வெளியிட்டு வீதிகள் பதிவேடு நாளது வகையாக்கப்படும் என அறிய தருகின்றேன். |
| (ஊ) | **வாகனப் பயன்பாடு**<br>---------------------------------<br><u>மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்படாமை</u><br><br>சபைக்குச் சொந்தமான 4 இயந்திரங்கள் மற்றும் ஒரு வாகனம் 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலப் பகுதியில் ரூபா. 1,894,855 ஆன எரிபொருள் செலவினத்தை மேற்கொண்டு 1918.6 மீற்றர் மணித்தியாலங்கள் ஓட்டத்தில் ஈடுபடுபட்டு 165 நிர்மாணங்களை நிறைவேற்றியதாக நாளாந்த ஓட்டக் குறிப்புகளில் காட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த தொழில்களுக்காக வேலை பூர்த்தி அறிக்கை மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | 13 பிரிவுகள் உள்ளடங்கும் விதமாக 2 லட்சம் ரூபாய் அதிகபட்ச அளவின் கீழ் எரிபொருள் வழங்கி மதிப்பீடுகள் இல்லாமல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிய தருகின்றேன். |

**3.5 பெறுகைகள்**

---------------------

**பெறுகைத் திட்டம்**

-------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திட்டம் முறையாக இல்லாததால் 2020 ஆம் ஆண்டிற்கு திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக போதியளளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | தற்பொழுது உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தப்படடுள்ளதாக அறிய தருகின்றேன். |